# அரபி தெரிந்தவரெல்லாம் மார்க்கத்தின் சொந்தக்காரர்களா?

**நஸ்ருல்லாஹ்**

அல்லாஹ் மனிதனை ஏனைய படைப்புக்களைவிட உயர்ந்த படைப்பாகவும் அழகிய படைப்பாகவும் படைத்துள்ளான். இந்த உயர்வுக்குக் காரணம் மனிதனுக்கு மட்டுமே பகுத்தறியும் ஆற்றலை அல்லாஹ் வழங்கியுள்ளமையே ஆகும். மனித சமுதாயம் சாந்தியும் சமாதானமும் உடைய வாழ்க்கையைப் பெறவேண்டுமானால், அவனுடைய பகுத்தறிவு மட்டுமே அவனுக்குப் போதுமானதாக இருந்துவிட முடியாது. எனவே அல்லாஹ் அந்தந்தக் காலங்களில் வாழ்ந்த இறைத்தூதர்கள் மூலம் தன்னுடைய நேர்நெறி வசனங்களை அந்த மக்களுக்கு வழங்கியுள்ளான். நபி முஹம்மது(ஸல்) அவர்களுக்குப் பின், எந்த நபியும் வரப்போவதில்லை; அவர் களுக்கு அருளப்பட்ட குர்ஆனுக்குப் பிறகு வேறு எந்த நெறி நூலும் அருளப்படப் போவதில்லை. எனவே உலகும் உள்ளது வரை மனிதன் குர்ஆனையும் நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை முன்மாதியையும் பின்பற்றி வாழக் கடமைப்பட்டுள்ளான். மனிதன் தன்னுடைய பகுத்தறிவை முறையாகப் பயன்படுத்திப் பார்ப்பானேயானால், இத்தகைய ஒரு வாழ்க்கை முறையை அறிந்து அதன்படி வாழ்வதையே தேர்ந்தெடுத்துக் கொள்வான்.

அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும் நம்பி அதனடிப்படையில் தன் பகுத்தறிவைப் பயன்படுத்தி வாழும் போது மனிதன் உயர்வடைகிறான். மனிதன் பல்வேறு அறிவுத் துறைகளில் தேர்ச்சியுடையவனாக இருக்கலாம் ஒருவன் பொறியியல் வல்லுநனாக இருக்கலாம். ஒருவன் சிறந்த மருத்துவ வல்லாளனாக இருக்கலாம். இன்னொருவன் ஒரு தேர்ந்த மாலுமியாக இருக்கலாம். இப்படி ஒவ்வொரு வரும், ஒவ்வொரு துறையில் மேலோங்கிய அறிவு பெற்றிருக் கலாம். இருந்தாலும் எல்லா மனிதரும் குர்ஆனுடனும், ஹதீஸுடனும் நேரடித் தொடர்பு கொண்டு அவற்றின் அடிப்படை ஞானங்களைக் கண்டிப்பாகப் பெற்றிருக்க வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது.

**"குல் ரப்பி ஸித்னீ இல்மா"** - இறைவா என் அறிவு ஞானத்தைப் பெருக்குவாயாக என்று துஆ கேட்குமாறு இறைவன் நபி(ஸல்) அவர்கள் வாயிலாக நமக்கு உணர்த்தியுள்ளான். இறைவன் மனிதனைப் படைக்கக் கருதி முதலாவதாக ஆதமைப் படைத்தபோது, அவருக்குப் பொருட்களின்

பெயர்களை எல்லாம் கற்றுக்கொடுத்தான் என குர்ஆன் கூறுகிறது. அல்குர்ஆனின் முதல் வெளிப்பாடு கூடப் படியுங்கள் என்னும் பொருள் தருகின்ற **'இக்ரஃ'** என்ற சொல்லுடன் தான் தொடங்குகிறது. ஆக படிக்க வேண்டியவதும் அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டியதும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கட்டாயக் கடமையாகும். ஒரு முஸ்லிம் என்கிற நோக்கில் ஒருவர் குர்ஆன், ஹதீஸுடைய கல்வி அறிவு பெறுவதற்கே முதலிடம் கொடுக்க வேண்டும். பிறதுறைகளில் அவர் பெறுகின்ற அறிவுக்கு இரண்டாவது இடம் வழங்கப்பட வேண்டும்.

**"நான் சிறந்த மருத்துவ அறிவு பெற்றுள்ளேன்; அதுவே எனக்குப் போதுமானது; குர்ஆன், ஹதீஸுடைய அறிவு பற்றி எனக்குக் கவலையில்லை"** என்று எந்த முஸ்லிமும் சொல்ல முடியாது. இதைத்தான் நபி(ஸல்) அவர்கள் **"அறிவு தேடுவது ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் கட்டாயக் கடமையாக பர்ழாக இருக்கிறது"** எனக் கூறியுள்ளார்கள். இதனடிப்படையில் பார்க்கும்போது ஒவ்வொரு முஸ்லிமும் கட்டாயமாக ஒரு ஆலிம் ஆக இருக்க வேண்டும் என எதிர் பார்க்கப்படுகின்றனர்.

ஆனால் இன்று என்ன நடக்கிறது? முஸ்லிம் மக்களை இரு கூறாகப் பிரித்து, ஒரு கூட்டம் ஆலிம்கள் கூட்டம் எனவும் மற்றொரு கூட்டம் பாமர மக்கள் கூட்டம் எனவும் பிரித்து வைக்கப்பட்டுள்ளது, இந்தப் பாமர மக்கள் குர்ஆன், ஹதீஸை விளக்கமாகப் படிப்பது படித்ததைப் பிறருக்கு எழுதியோ பேசியோ தெரிவிப்பது விரும்பத்தகாத செயலாகக் கொள்ளப்படுகிறது.

குர்ஆனையும், ஹதீஸையும் எடுத்துரைப்பது ஆலிம்கள் என்ற கூட்டத்தினருக்கு மட்டுமே பிறப்புரிமை என்பது போலும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இந்த ஆலிம்கள் எப்படி உருவாகிறார்கள்? இவர்களுடைய பின்னணி என்ன என்பதை ஆராய்வோமானால், பெரும்பான்மையோருடைய நிலைமை மிகவும் இரங்கத் தக்கதாகவே இருப்பதைக் காணலாம்.

படிப்பில் மக்குப் பிள்ளைகள், வீட்டில் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாத பிள்ளைகள், பள்ளிப் படிப்புக்கு வழியில்லாத வறிய நிலையில் உள்ள பிள்ளைகள், இவர்கள்தான் பெரிதும் மதரஸாக்களுக்கு மௌலவீ பட்டம் பெறுவதற்காக அனுப்பப்படுகின்றார்கள். ஏதோ ஏழு வருஷம் மதரஸா கட்டிடங்களில் உண்டு, உறங்கி ஒரு சில பிக்ஹு நூல்களை மேலோட்டமாகப் படித்துவிட்டு முறையான தேர்வு எதுவுமின்றி ஸனதுடன் வெளி வருகிறார்கள் தமிழ்நாட்டு இளம் மௌலவீகள். இந்த மௌலவீகள் தங்களை ஆலிம்கள் எனப் பறைசாற்றிக் கொள்கிறார்கள்.

மதரஸாவுக்குச் செல்லாமல் ஒருநாளின் பெரும்பகுதியைக் குர்ஆன் ஹதீஸைப் படிப்பதிலும் அதை விளங்கிக் கொள்வதிலும் ஒருவர் செலவிடுகின்றார். அதை அவர் பிறருக்கு எடுத்துரைக்கின்றார். இது மேலே கண்ட ஆலிம்கள் கூட்டத்துக்கு எரிச்சலூட்டுவதாக உள்ளது.

பெரும்பான்மையான ஸனது பெற்ற மௌலவீகளுக்கு அரபி மொழியில் நாலு வார்த்தை சரளமாகப் பேசுவதற்கே இயலவில்லை. ஒரு சிலர் அரபி மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்களும் இருக்கின்றார்கள். இருந்தாலும் அரபி மொழியில் பாண்டித்தியம் உள்ள ஒரே காரணத்தினால் மட்டுமே அவர் குர்ஆனையும், ஹதீஸ்களையும் உரிய முறையில் விளங்கிக் கொண்டார் எனச் சொல்ல முடியாது. காரணம் பெரும்பான்மையான இந்த மௌலவீகள் குர்ஆனையும், ஹதீஸையும் நேரடியாகப் படித்து விளங்கிக் கொள்ளுவதே இல்லை. அதை நேரடியாகக் கற்று அதிலிருந்து நேர்வழியைத் தெரிந்துகொள்ள அவர்கள் முயற்சி எடுப்பதுமில்லை. ஆக அரபிமொழியில் புலமை இருந்தாலும்கூட, அதிலிருந்து அவர்கள் ஹிதாயத் நேர்வழி பெறுவதில்லை. இது எதுபோலிருக்கிறது என்றால், சிரியா, ஜோர்டான் நாடுகளில் உள்ள நிலைமை போலவே உள்ளது. அங்கே கிறிஸ்துவ, யூத அறிஞர்கள் நிறைய பேர் உள்ளனர். அவர்களுடைய தாய் மொழியே அரபி மொழிதான். அவர்கள் மனிதக் கருத்துக்களுடன் கலந்து எழுதப்பட்ட தவ்ராத்தையும், இன்ஜீலையும் தெய்வ வாக்காகத் தவறுதலாக விளங்கியுள்ளனர். குர்ஆனையும், ஹதீஸ் நூல்களையும் அவர்கள் சரளமாகப் படிக்கிறார்கள். ஆனால் குர்ஆனிலிருந்தோ ஹதீஸிலிருந்தோ அவர்களில் பெரும்பான்மையோருக்கு ஹிதாயத் என்னும் நேர்வழி கிடைப்பதே இல்லை.

மனித அபிப்பிராயங்களுடன் கலந்து எழுதப்பட்ட தவ்ராத், இன்ஜீலுக்குத்தான் அவர்கள் முதலிடம் கொடுக்கிறார்களே தவிரக் குர்ஆன், ஹதீஸுக்கு அவர்கள் முதலிடம் தருவதில்லை. இதுபோல் தான் தெற்காசியாவிலுள்ள அரபி மொழியில் பாண்டித்தியம் பெற்றுள்ள உலமாக்களில் பலர் மனித அபிப்பிராயங்களுடன் கூடிய பிக்ஹு நூல்களுக்கும் மத்ஹபு நூல்களுக்கும்தான் முக்கியம் கொடுக்கிறார்கள். குர்ஆன், ஹதீஸில் இருந்து நேரடியாக எளிதாக விளங்கிக் கொள்ளும் கருத்துக்களுக்கு அவர்கள் சிறப்பிடம் தருவதில்லை: அவர்களுக்கு அரபி மொழியில் ஆளுமை இருக்கிறது என்ற பெருமை ஒருபுறம். அதைக்கொண்டு குர்ஆன், ஹதீஸிலிருந்து நேரடியாக ஹிதாயத் பெற வியலாத

ஊனம் மறுபுறம்; ஆக இந்தத் தெற்காசிய உலமாக்களில் பெரும்பான்மையோரின் நிலை இதே நிலைதான்.

அபூஜஹ்ல் அரபி மொழியில் ஒப்புயர்வற்ற மாபெரும் பண்டிதனாக விளங்கினான். அவன் காலத்தில் அபூஜஹ்ல் ஒரு சிறந்த அறிஞனாக, விற்பன்னனாகத் திகழ்ந்தான். '**ஞானத்தின் தந்தை**' என்ற பொருளில் '**அபுல்ஹிகம்**' என அவனை அழைத்தார்கள் அக்கால மக்கள். இத்தனையும் இருந்துங்கூடக் குர்ஆனை விளங்கி, அதிலிருந்து ஹிதாயத் பெறுகின்ற தவ்பீக் அவனுக்குக் கிடைக்கவில்லையே! குர்ஆனையும் நபி(ஸல்) அவர்களையும் அறிந்து கொள்ளுகின்ற அத்தகைய உன்னத அறிவை அவன் பெறவில்லை. இந்த ஒரே காரணத்துக்காகத்தான், பிற அறிவுகளின் தந்தையாக விளங்கிய போதுங்கூட, அவனை '**அறியாமையின் தந்தை**' என்பதாக அபூஜஹ்ல் ஆக வரலாறு இனங்காட்டிக் கொண்டிருக்கிறது.

தெற்காசிய உலமாப் பெருமக்களில் பெரும்பான்மையோர் அரபி ஞானத்தின் தந்தையாகத் தங்களைத் தருக்கோடு சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களிடம் ஒரு மஸ்அலா குறித்துக் கேள்வி எழுப்புவோமா னால் குர்ஆன், ஹதீஸிலிருந்து ஆதாரம் காட்டமாட்டார்கள். மனித கருத்துக்களைக் கொண்டு நிரப்பப்பட்ட ஃபத்வா கிதாபுகள், ஃபிக்ஹு கிதாபுகள் முதலியவற்றையே ஆதாரம் காட்டுகின்றார்கள். ஆக, இந்த ஃபிக்ஹு நூல்களின் நி லில் ஒதுங்கிக் கொள்வதில்தான் அவர்கள் ஆனந்தம் காண்கிறார்களே தவிர, குர்ஆன், ஹதீஸின் போதனையில் அதை விளக்குவதற்கு இயலாதவர்களா யிருக்கின்றார்கள்.

இப்படிப்பட்ட நிலையில், யாராவது ஒருவர், எழுப்பப் படுகின்ற மஸ்அலாக்களுக்கு குர்ஆன், ஹதீஸிலிருந்து நேரடியாகச் சான்று சுட்டிப் பதில் தரும்போது அதைக்கண்டு இந்த '**அபுல் ஹிகம்கள்**' ஆவேசம் கொள்கிறார்கள், 'இவன் யார்? இவனுக்கு என்ன தகுதியிருக்கிறது? அரபி மொழியில் இவனுக்குப் பாண்டித்திய மிருக்கிறதா? ஃபிக்ஹு ஞான மிருக்கிறதா?' என்றெல்லாம் கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார்கள். குர்ஆன், ஹதீஸிலிருந்து ஆதாரம் காட்டி எடுத்து வைக்கப்பட்ட தீர்ப்பைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை.

**நெறிநூலை மக்களுக்கு விளக்காமல் மறைத்துவிட்டு அற்பக் காசுக்கு விற்பார்கள்.**

***அல்குர்ஆன் 3:187, 199***

**அல்லாஹ்வின் வசனத்தை புறக்கணிப்பவனைவிட அநியாயக்காரன் யார்.** *அல்குர்ஆன் 6:157*

இந்த குர்ஆன் வசனங்கள் கூட அவர்களுக்கு வழிகாட்டப் போதுமானதாயில்லை. ஆனால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? "நாங்கள் பழம் பெரும் உலமாக்கள்; நேற்று வந்தவனெல்லாம் மஸ்அலாக்களுக்குத் தீர்ப்பு வழங்குவதா? அதற்கு நாங்கள் கட்டுப்படுவதா? எனக்கேட்கிறார்கள். இது எதைப் போலிருக்கிறது என்றால் ஷைத்தானின் வாதத்தைப் போலவே இருக்கிறது.

அல்லாஹ் மனிதனைப் படைத்து ஆதத்துக்கு மரியாதை செய்யுமாறு மலக்குகளிடம் கூறியபோது, ஷைத்தான்மட்டும் திமிர் பேசினான். **"நான் நெருப்பால் படைக்கப்பட்டவன்; இந்த மனிதரோ மண்ணால் படைக்கப்பட்டவர். நானே அவரைவிட மேலானவன்"**, எனக்கூறி முதல் மனிதருக்கு ஆதத்துக்கு மரியாதை செய்ய மறுத்தான் ஷைத்தான்.

நாங்களோ பழம் பெரும் உலமாக்கள், அரபிக்கலை ஞானவித்தகர்கள். பிக்ஹுவிலும் ஃபத்வாக் கிதாபுகளிலும் தேர்ந்த விற்பன்னர்கள் இவர்களோ அத்தகைய கல்வியைப் பெறாதவர்கள். இப்படி இருக்கும்போது இவர்கள் கூறும் குர்ஆன், ஹதீஸ் கருத்துக்களைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. அதற்கு நாங்கள் கட்டுப்பட மாட்டோம் என்பதுதான் இன்றைய தமிழக உலமாக்களின் வரட்டு வாதமாகும். ஆக அன்று ஷைத்தான் எந்தக் 'கிப்ரு' என்னும் பெருமையும் ஆணவமும் செருக்கும் கொண்டிருந்தானோ அதே பெருமையும் ஆணவமும் செருக்கும் இந்த உலமாக்களிடமும் குறைவின்றி இருக்கிறது.

தாங்கள்தான் மார்க்கத்தின் ஏகபோக வாரிசுதாரர்கள் என்று பேசிக்கொண்டு மற்றவர்களைப் பரிகசித்து நிற்கும் இந்த உலமாக்கள் இந்த ஹதீஸைப்பற்றிக் கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்பார்களாக.

**"இஸ்லாம் அனாதரவானவர்களிடமிருந்து வந்தது, அது அனாதரவானவர்களிடமே மீளும்"** என்பதாக நபி(ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி யுள்ளார்கள். அரபி மொழி படித்தவர் மார்க்கத்தைப் பேச வேண்டும் என்பது இவர்களுடைய வலுவான வாதமாகும். அரபிக் கல்வியை வைத்து வேறு எந்தத் தொழிலும் செய்யாமல், அந்தக் கல்வியையே மூலதனமாக வைத்து வயிறு வளர்க்கக்கூடிய அவல நிலையில் தான் பெரும்பாலான உலமாப் பெருமக்கள் உள்ளனர்.

ஹலாலான முறையில் வேறு துறைகளில் தொழில் பார்த்து அதன் மூலம் வாழ்க்கையை நடத்துபவர்கள், தங்கள் காலத்தைச் செலவிட்டுப் பெருஞ்சிரம மெடுத்து குர்ஆன், ஹதீஸைப்படித்து அதைப் பிறருக்குச் சொல்லும்போது இந்த உலமாக்கள் பொங்கி எழுகின்றார்கள். ஏதோ அவர்களுக்கே முழு உரிமையுடைய சொத்தில் மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்வது போலப் பாய்கிறார்கள். சொன்னவர் வெளியிட்ட கருத்தின் அடிப்படையில் அவர்கள் அணுகுவதில்லை. மாறாக ஆங்கிலக் கல்வி படித்தவனுக்கு மார்க்கத்தைப் பற்றிப் பேச என்ன அருகதை இருக்கிறது எனக்கேள்வி எழுப்புகிறார்கள். வேறு தொழில் பார்ப்பவர்கள் குர்ஆனையும், ஹதீஸையும் படிப்பதோ, தாம்படித்த கருத்துக்களை வெளியிடுவதோ இந்தப் பெரும்பான்மை உலமாக்களின் கண்ணோட்டத்தில் ஒரு பாவகாரியமாகவே கருதப்படுகிறது. இந்த உலமாக்கள் ஏதேனும் ஃபத்வாக்களை கொடுக்கும்போது, "**இதற்கு குர்ஆன், ஹதீஸில் ஆதாரமிருக்கிறதா? எங்கே சான்று காட்டுங்கள்**" எனக்கேட்போமானால் இவர்களுக்குப் பற்றி எரிகிறது. "**நான் சொல்கிறேன்; நான் படித்த ஃபத்வாகிதாபு சொல்கிறது. இதைவிட உனக்கு வேறென்ன வேண்டும்**" என நம்மீது எரிந்து விழுகிறார்கள்.

குர்ஆனையும், ஹதீஸையும்பற்றி வெறும் வாயளவில் புகழ்ந்து பேசும் இவர்கள், நடைமுறை சிக்கல்களுக்குரிய தீர்வை குர்ஆன் ஹதீஸிலிருந்து நேரடியாக எடுத்துக் கொள்ள முன்வருவதில்லை. இப்னு அரபி, இமாம் கஸ்ஸாலி முதலியவர்களின் நூல்கள், மற்றும் எண்ணற்ற ஃபத்வா கிதாபுகள் முதலியவற்றின் ஊடாகத்தான் இவர்கள் குர்ஆனையும், ஹதீஸையும் அணுகுகின்றார்கள். தெற்காசிய உலமாக்களில் பெரும்பாலோர் மிகவும் விருப்பமுடன் போற்றும் ஒரு நூல் இஹ்யா உலூமுத்தீன். கிரேக்கத் தத்துவங்களின் தாக்கத்தைக் கொண்டு இமாம் கஸ்ஸாலி எழுதிய நூல் இது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கஸ்ஸாலி மாபெரும் அறிஞராகத் திகழ்ந்தார். இஹ்யா உலூமுத்தீன், கீமியா ஃபுத்திஹாதுல் உலூம் முதலிய பல நூல்களை இவர் எழுதியுள்ளார். கிரேக்க அறிஞர்களான பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரின் தத்துவங்களாலும் சித்தாந்தங்களாலும் கஸ்ஸாலி பெரிதும் ஈர்க்கப்பட்டார். குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றுக்குக் கிரேக்கச் சித்தாந்தச் சாயம் பூசி ஸூபிசக் கொள்கையை வளர்த்து விட்டவர்களில் கஸ்ஸாலிக்கு முக்கியப் பங்கு உண்டு. கி.பி. 1165 முதல் 1240 வரை வாழ்ந்திருந்த இப்னு அரபி என்னும்

கவிஞர் ஸுஃபிஸத்தை இஸ்லாத்தில் இணைத்து அதைத் தம்மால் முடிந்த அளவுக்கு வளர்த்து விட்டார். இவர்களுடைய ஸூபிச நோக்கத்தோடு கூடிய அத்வைதக் கோட்பாடுகள் இஸ்லாத்தில் நுழைக்கப்பட்டன. ஆண்டவனுடன் அடியான் ஒன்றிவிட முடியும் என்கிற வகையில் இந்த அத்வைதக் கருத்துக்கள் இஸ்லாத்தில் புகுத்தப்பட்டன. அல்லாஹ் வேறு அடியார் வேறு என்பதைக் கிஞ்சித்தும் ஐயத்துக் கிடமின்றித், தெள்ளத் தெளிவாக இஸ்லாம் வலியுறுத்திச் சொல்லியிருக் கிறது. எனினும் பரமாத்மாவோடு ஜீவாத்மா இரண்டறக் கலந்துவிடும் என்னும் கிரேக்க, கீழைநாட்டுச் சித்தாந்தங் களை இப்னு அரபி போன்றோர் எடுத்துரைத்தனர்.

நம்முடைய தெற்காசிய உலமாப் பெருமக்கள் இந்த அத்வைத ஸூபிசக் கருத்துக்களுக்கே சிறப்பிடம் கொடுக்கின் றார்கள். இந்த அத்வைதம், ஸூபிசம் ஆகிய ஊன்றுகோல் களை எடுத்துக்கொண்டு தான் அவர்கள் குர்ஆன், ஹதீஸுடைய பாதையில் செல்கிறார்கள். இவர்களுடைய அவலநிலை இப்படி இருக்கிறது.

ஆனால், அவர்களால் பாமர மக்கள் என வர்ணிக்கப் படுபவர்களோ இந்த ஸூபிஸத்தையோ அத்வைதத்தையோ பற்றிக் கவலை கொள்வதில்லை. ஏன்? அவர்கள் ஃபிக்ஹு, ஃபத்வா நூல்களுக்குக்கூட மிக உன்னத இடத்தைக் கொடுப் பதில்லை. இம் மக்கள் குர்ஆனையும், ஹதீஸையும் அதன் மொழி பெயர்ப்புகளுடன் விளங்கிக் கொள்கிறார்கள். இப்படிப் பொதுமக்கள் குர்ஆனையும், ஹதீஸையும் நேரடியாகவே விளங்கிச், செயல்படுத்தத் தொடங்கியதும், பழம் பெரும் உலமாக் கள் ஜன்னி கண்டவர்களைப் போல நடுங்குகின்றார்கள்.

எனவே எதிர்காலத்தில் இஸ்லாம் அதன் தனித் தன்மையோடு எந்தவிதக் கலப்படமும் இல்லாமல் தழைத் தோங்க வேண்டுமானால், பொதுமக்கள் ஒவ்வொருவரும் குர்ஆன், ஹதீஸை நேரடியாகப் படித்து விளங்கிக் கொள்ள முன்வர வேண்டும். அதற்குரிய முயற்சியும் ஈடுபாடும் நிய்யத்தும் கொண்டு, முஸ்லிம் ஒருவர் அந்த வழியில் தளராது பாடுபடும் போது, அது அவருக்கு எளிதில் கைகூடுகிறது. இவ்வகையில் ஒவ்வொரு முஸ்லிமும் பாடுபட்டு ஆலிமாக ஆதல் வேண்டும். அப்போது தான் நாம் அறிவு தேடுவது ஒவ்வொரு முஸ்லிம் ஆணுக்கும் பெண்ணுக்கும் கட்டாயக் கடமையாக – பர்ழாக உள்ளது என்ற நபி(ஸல்) அவர்களின்

சொல்லுக்கு ஏற்பச் செயல்பட்டவர்களாக முடியும். மார்க்க அறிவு பெறுவதற்கு ஒரு தனிக்கூட்டத்தினருக்குத்தான் தகுதியுள்ளது என்று எண்ணாமல், ஒவ்வொரு முஸ்லிமும் ‘இல்மு’ பெறுவதற்குத் துடித்தெழ வேண்டும். அவ்வாறு அறிந்து அமல் செய்வதைத்தான் அல்லாஹ்வும் விரும்பு கின்றான். எதையுமே அறிந்து கொள்ளாமல் குருடர்களாகவும், செவிடர்களாகவும் ஊமையர்களாகவும் வாழ்பவர்கள் வெறும் கடச்சலையும் ஓசையையும் பின்தொடர்ந்து செல்லும் கால்நடைகளுக்கு ஒப்பானவர்கள் என்ற பொருளில் இறை வசனம் ஒன்று அமைந்திருக்கிறது (7:179). எனவே எதையும் நன்கு அறிந்து தெளிந்து அமல் செய்ய முஸ்லிம்கள் கடமைப் பட்டுள்ளனர். இவ்வாறு அறிந்து அமல் செய்யும் நிலை உருவாகும்போது அங்கு ஆண்டவனுக்கும் அடியாருக்கு மிடையே எந்த இடைத்தரகரோ, புரோகிதரோ, ஷேக்கோ, முர்ஷிதோ தேவையில்லாமல் போகிறார். இதையே அல்குர்ஆனின் 7:3,33:36, 66,67,68 வசனங்கள் வலியுறுத்துகின்றன. அதற் காகத்தான், இந்த நிலை உருவாகிவிடுமானால் தம்முடைய குருத்துவம் பறிபோய் விடுமே என இந்தப் புரோகிதர் கூட் டம் பதறியடித்துக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே ஒரு சில உலமாக்களின் சுயநல நோக்கத்துக்காக இஸ்லாத்தை அவர்களிடம் அடகு வைத்து விடாமல், ஒவ்வொரு முஸ்லிமும் குர்ஆனையும், ஹதீஸையும் கற்றுத் தெளிந்து அவர்களின் பிடியிலிருந்து இஸ்லாத்தை மீட்பதற்கு ஆர்வம் கொள்ள வேண்டும். அந்நிலை உருவாக அல்லாஹ் அருள் புரிவானாக.